Registreed as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப் மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 388 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 4
மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 22 ஆம் நாள் ஷவ்வால் 20 (6-3-64) வெள்ளிக்கிழமை இதழ் 25

# அவசரகாலச் சட்டம் பிரகடனம்!

கொழும்பு, வியா.

அவசரகாலச்சட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தங்களினுல் அத்தியாவசிய சேவை, உணவு விநியோகம் ஆகியன தடைப்படாதிருக்கவே இவ்விதம் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

டாக்டர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் மின்சார என்ஜினியர்கள் இன்று வேலைநிறுத்தம் செய்ய ஆரம்பித்துள்ளதால், இவற்றுல் எழுந்துள்ள நிலைமையைச் சமாளிக்கவே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்சார என்ஜினியர்கள் வேலைநிறுத்தம்

### எங்கும் இருள்மயம்

கொழும்பு, வியாழன்

பாதுகாப்பு அலவன்ஸ் 15 சதவிகிதம் அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைமீது மின்சார என்ஜினியர்கள் இன்று வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்.

**இருள்மயம்**

மின்சார என்ஜினியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இன்று இரவு நாட்டின் சகல பகுதிகளிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டது. இதனுல் வீதிகளிலும் வீடுகளிலும் இருள்மண்டிக் கிடந்தது.

மின்சாரம் தடைப்பட்டதால் தத்தமது வீடுகளில் கைவிளக்குகளை ஏற்றுவதற்காகப் பல மக்கள் மண்ணெண்ணை தேடி அலைந்தனர். சிலர் மெழுகு வர்த்தி வாங்கி வெளிச்சத்தை ஏற்படுத்திக்கொண்டனர். மண்ணெண்ணை வாங்குவதற்காகப் பலர் சென்றதால் பல இடங்களில் மண்ணெண்ணைத் தட்டுப்பாடு ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

மின்சார விநியோகம் தடைப்பட்டதால் கொழும்பிலும் மற்ற நகரங்களிலும் குழாய்மூலமான தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டது.

மின்சார விநியோகம் இல்லாததால் ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகள் ஆகியன பெரிதும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய சுற்றறிக்கை பற்றி தமிழ்அரசாங்கயூனியன்கருத்து

### 'புதிய சுற்றறிக்கையால் பொலிஸ், இராணுவசேவை பாதியாது'

கொழும்பு, வியாழன்

சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பாத சகல அரசாங்க ஊழியர்களும் மூன்றுமாத முன்னறிவித்தலுடன் கட்டாய ஓய்வு பெறக்கோர, தகுதி பெற்ற அதிகாரி யொருவருக்கு உரிமையுண்டென்று அண்மையில் திறைசேரிக் காரியதரிசியினுல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை சம்பந்தமாக தமிழ் அரசாங்க குமாஸ்தா சங்கம் அரசாங்கத்துக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழ் அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தின் காரியதரிசி திரு. ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவிக்கையில்; 560-வது திறைசேரியின் சுற்றறிக்கையின்படி சிங்களத் தேர்ச்சி பரீட்சைக்குத் தோற்றுத அரசாங்க ஊழியர்கள் அவர்களின் இலாகா தலைவர்களின் உத்தரவின கீழ்தான் தங்களது சேவையில் தொடர்ந்திருக்க முடியுமென்றும் ஓய்வு மனுக்களை சமர்பபித்து பின்னர் வாபஸ் பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கும் அளித்த சலுகையைப் போன்று இரண்டு வருடகால அவகாசம் அளிக்கப்படவில்லையென்றும் கூறினர்.

திறைசேரியின் புதிய சுற்றறிக்கையினுல், பொலிஸ இராணுவ சேவையிலுள்ளவர்கள் பாதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். சிங்களத்தில் தேர்ச்சிபெருத ஆனுல் அவசியம் தேவைப்படுகிற அரசாங்க ஊழியர்களைத் தங்கள் விருப்பப்படிசேவையில் வைத்திருக்க இலாகா தலைவர்களுக்கு புதிய சுற்றறிக்கை வகை செய்கிறது என்றும் அவர் தெரிவுத்துள்ளார்.

## இறுதி நேரத்தில் உயிர் பிழைத்தது

காங்கேசன் துறை, வியாழன்

ஆஸ்பத்திரி தொழிலாளி ஒருவர் கழுத்தில் கருக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சிக்கையில் பொலிஸாரின் தலையீட்டினுல் அவரின் முயற்சி தோல்வியுற்ற சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

காங்கேசன்துறை அரசினர் ஆஸபத்திரியில் கடமையாற்றும் இராமன் என்பவர் காங்கேசன்துறை ஐயனுர் கோவிலுக்கு எதிரிலுள்ள ஒரு புளிய மரக்கிளையில் தூங்கித் தற்கொலை செய்ய முயற்சிக்கையில் காங்கேசன்துறைப்பொலிஸைச் சேர்ந்த ரி. குழந்தைவேலு என்பவர் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று கயிற்றை அறுத்து அவரைக் காப்பாற்றினுர். அவர் பின்னர் அறிவு மயங்கிய நிலையில் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

மேற்கூறப்பட்ட நபர் தனது மனைவியுடைய நகையை அடைவு கடையிலிருந்து மீட்பதற்காக மனைவியிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு காலையில் சென்றுரென்றும் சிலமணி நேரத்தில் அப் பணத்தைக் குடியில் செலவு செய்துவிட்டாரென்றும் வீடு செல்ல அஞ்சியே குடிபோதையில் இக்காரியத்தை செய்தாரென்றும் பொலிசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

## தபால் உத்தியோகஸ்தா வழமைபோல் சேவை

கொழும்பு, வியாழன்

தபால் உத்தியோகத்தர்கள் "ஓவர்டைம்" செய்யாததால் தந்தி சேவைகள் இன்று அநேகமாக ஸ்தம்பிதமடைந்தன. பல தபாற்கந்தோர்களில் எவ்வித வேலையுமே நடைபெருமலிருந்தது.

அவசரகாலம் பிரகடனப்படுத்தினதையிட்டு நாளை இவர்கள் வழக்கம்போல் வேலைசெய்வார்கள் என நம்பப்படுகிறது.

இன்று இரவு யாழ்ப்பாணம் - கொழும்பு தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

## மின்சார விநியோகம் முப்படை கவனிக்கும்

கொழும்பு, வியாழன்

மின்சார என்ஜினியர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளதால் நாட்டின் மின்சார விநியோகம் பூரணமாகத் தடைப்படாதிருக்க இராணுவம்,விமானபடை, கடற்படை ஆகிய முப்படைகளிலுமுள்ள இலங்கை என்ஜினியர்கள் யூனிட் மின்சார விநியோக சேவையில் ஈடுபடுத்தப்படுமென அறியப்படுகிறது.

## "திறைசேரி சுற்றுநிருபம் வாபஸ்பெறப்பட வேண்டும்"

### அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

மொழிப்பிரச்னையை சுமுகமாகத்தீர்த்துவைக்க அரசியல் கட்சித்தலைவர்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்த பிரதம மந்திரியும் ஏனையோரும் முயற்சித்துக் கொண்டிருக்கும் வேளையில் சிங்களத்தில் தேர்ச்சிபெருத தலைமையாசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரின் சம்

(5-ம் பக்கம்பார்க்க)

## காங்கேசன்துறை டாக்டர்களும் வேலைநிறுத்தம்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் வேலைசெய்த நான்கு டாக்டர்களும் இன்று வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டுள்ளார்கள். இவர்கள் நேற்றுவரை வேலைநிறுத்தம் செய்யாமல் இருந்தவர்கள் இன்று திடீரென வேலைநிறுத்தம் செய்தனர். இவர்களுடைய வேலைகளை அப்போதிக்கரிமார்கள் செய்கிறுர்கள்.

**யாழ்ப்பாணத்தில்**

## குழாய் நீர் விநியோக நேரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மின்சார என்ஜினியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இன்று காலை 10 மணி முதல் 11 மணிவரையும், மாலை 3 மணி முதல் 4 மணிவரையுமே யாழ்ப்பாணத்தில் குழாய் நீர் விநியோகம் செய்யப்படுமென யாழ்ப்பாண நகரசபை அறிவித்துள்ளது.

## தாயகம் திரும்பும் கனடாஸ்தானிகர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையில் கனடா தூதராக கடமையாற்றிய திரு. ஜேம்ஸ் ஜோர்ஜ் சென்னை மார்க்கமாக கனடாவுக்குப பயணமாகிருர் சென்னைக்குப் போகும் வழியில் அவர் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இன்று காலை சிறிது நேரம் தங்கி நின்றுர். பல பிரமுகர்கள் அவரை வரவேற்றுர்கள்.

## ஊனமுற்ருேர் விடுதி திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

பண்ணையில் புதிதாகக் கட்டப்பட்ட ஊனமுற்ருேர் விடுதியை நேற்று டாக்டர் வி. ரி. பசுபதி திறந்துவைத்தார்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் முதலியார் முத்துத்தம்பி, திரு. கே. பி. ஹரன், முதலியார் கணபதிப்பிள்ளை ஆகியோர் பேசினர்.

### மணிவாசகம்

நமது குற்றத்தை ஒப்புக் கொண்டு அதற்குப் பரிகாரம் செய்யத் தயாராக இருப்பின், நாம் அடுத்தபடி என்ன செய்ய வேண்டுமென்ற கடவுளின் விருப்பமும் நமக்குள்ளிருந்து நமக்குக் கேட்பதாக இருக்கும்.

— கானன் ஸ்டிரீட்டர்

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389
யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
மாசி மீ 23 (6-3-64)

## இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

நேற்றும் இன்றும் இலங்கை பார்லிமெண்ட்சபையில் வெளிநாட்டு உறவுகள்பற்றி நடைபெறும் முக்கிய விவாதத்தை இலங்கை பொதுமக்கள் மட்டுமன்றி உலகில் பல நாடுகளும் ஆவலுடன் கவனிக்கக் காரணமுண்டு. இவ்விதமானவிவாதம் இதுவரைஜனப்பிரதிநிதிகள் சபையில் நடக்காதது ஒருபுறமிருக்க உலக அரங்கிலும் சிறப்பாக தென் கிழக்கு ஆசியாவிலும்இலங்கை மிக கேந்திரமான ஒரு ஸ்தானத்தை வகிப்பதுடன் சமீபகாலமாக விசேஷ சுறுசுறுப்புடன் பல காரியங்களைச்செய்து வருகின்றது.

கூட்டுச் சேரா நடுநிலைமைக் கொள்கையை கடைப்பிடிக்கும் இலங்கையின் பொறுப்பு மிகவும் கடினமானது. இச்சங்கடம் வரவர அதிகரிக்கின்றது. உலகம் இரு கோஷ்டிகளாக மட்டும் பிளவுபடவில்லை. மேற்கு நாடுகளுக்குள்ளும், கம்யூனிஸ்ட் நாடுகளுக்குள்ளும் மட்டுமன்றி நடுநிலைமை நாடுகளுக்குள்ளாகவும்கூட புதிய பிளவுகளும் வேற்றுமைகளும் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. இந்நிலையில் எல்லாருக்கும் நண்பர்களாக இருந்து யாவருடைய அபிமானத்தையும் உதவியையும்பெறுவதென்பது எவ்வளவு கஷ்டமென்பதை விளக்கத் தேவையில்லை. இதில் பலதவறுகள் ஏற்படலாம். ஏற்பட்டுமுள்ளன. இவ்விஷயம் தேசத்தின் பொது நன்மையைப் பொறுத்துள்ளதாலும் நாட்டில் எல்லாரும் நடுநிலைமைக் கொள்கையை ஆதரிப்பதாலும் பல கட்சியினருடைய ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அரசாங்கக்கட்சி பெறுவது வரவர மிகவும் அவசியமாகின்றது. அதைப் பெற்றாலே தவறுகள் குறைவாகவும் உலக சமாதானத்துக்கு இலங்கை நல்ல சேவை புரியக் கூடியதாகவுமிருக்கும்.

நடுநிலைமை என்பது மேலான கொள்கை தான். என்றாலும் எங்காவது மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகும்போது நடுநிலைமை என்ற காரணத்தால் பேசாமல் கைகட்டிக் கொண்டு மௌனம் சாதிப்பதாயின் அது சரியல்ல. உதாரணமாக இந்தியாவும் பாகிஸ்தானும் நமது நட்பு நாடுகள். சமீபத்திலே கிழக்கு பாகிஸ்தானிலிருந்து பல்லாயிரக்கணக்கான இந்து, பௌத்த, கிறிஸ்தவ குடும்பங்கள் தங்கள் வீடுவாசல் சொத்து முதலியவற்றைவிட்டு வெளியேறியதாகபரிதாபமான செய்திகள் கிடைக்கின்றன. இந்தியாவிலிருந்தும் அகதிகள் பாகிஸ்தானுக்கு வருவதாகக் கூறப்படுகிறது. எப்படியும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இவ்விதம் அவதிப்படுகையில் இலங்கை அவர்கள் கஷ்டங்களைத் தீர்க்க தன் கடமையைச் செய்ய முன்வர வேண்டும். இந்தக் கடமையைச்சரிவரச் செய்ய இலங்கை முதலில் தன் உள்வீட்டுப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை.

இந்தியா-பாகிஸ்தான், சீனம்-ரஷ்யா, மேற்குஜெர்மனி-கிழக்குஜெர்மனி, மலேஷியா-இந்தோனேஷியா, அமெரிக்கா-ரஷ்யா, இந்தியா-சீனு, இஸ்ரேல்-அரபுநாடுகள் இப்படிப் பலபலபிரச்சினைகளும் உலகமக்களின் சமாதானத்தைக் குலைக்கின்றன. யுத்தமின்றி புதிதாக விடுதலை அடைந்த நாடுகளிடையே தோன்றியுள்ள பூசல்கள் சம்பந்தப்பட்ட மக்கள் அமைதியாக வாழ முடியாதபடியும் ஆபத்து ஏற்படுத்துவதாக உள்ளது. ஆசிய-ஆபிரிக்க உறவுகளைப்பற்றிப் பேசுகின்றோம். ஆனால் அண்டை நாட்டினரும் முன்னிருந்த பிரயாண வியாபார உரிமைகளையும் வசதிகளையும் இழந்து, பிளவுபட்டு வாழக்கூடிய கண்றாவியான ஆபத்தான நிலை உருவாகிவருவதைப் பார்க்கின்றோம். அவற்றைக் குறைக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

இன்று தோன்றியுள்ள பிரச்சினைகளில் பலவும் ஏற்கெனவே ஆதிக்கம் செலுத்திய ஏகாதிபத்திய வல்லரசுகளால் தோற்றுவிக்கப்பட்டவையே. ஆகவே இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அந்த வல்லரசுகளுக்கும் பெரிய பொறுப்புண்டு. சிறப்பாக காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பிரிட்டனின் உதவியையும் யோசனையையும் பெற நாம் தயங்கக்கூடாது எல்லா நாடுகளும் உலக சமாதானத்தையும் மக்களின் நலனையுமே விரும்பி ஐக்கியநாடுகள் சபையில் சேர்ந்திருப்பதால் மனிதர்பற்றிய எந்தப் பிரச்சினையும் தீர்ப்பதில் எல்லா நாடுகளுக்கும் பொறுப்புண்டு. இப்புனிதமான பொறுப்பை நிறைவேற்றுவதில் எவ்வளவுதூரம் இலங்கை தன் சக்தியையும் செல்வாக்கையும் பயன்படுத்த முடிகிறதோ, அதைப் பொறுத்தே அதன் வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியும் அடங்கியதாக இருக்கும்.

# வெள்ளவத்தையில் வள்ளுவர் விழா

வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் சென்ற சனிக்கிழமை திரு. மு. வைரவப்பிள்ளையின் தலைமையிலே வள்ளுவர் விழா நடைபெற்றது. விழா கடவுள் வணக்கத்துடன் தொடங்கியபொழுது கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்த சகலரும் எழுந்துநின்று வணங்கினர். வரவேற்புரைக்கடுத்தாற்போல திரு வைரவப்பிள்ளை தனது தலைமைப் பேருரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "சமயத்துறையின் மூலம் தான் நாம் இன்று எக்காரியத்தையும் சாதிக்கக் கூடியதாகவிருக்கின்றது. அத்துடன் வாலிபர்கள் மூலம்தான் நாம் எக்காரியத்தை செய்யும்படியும் வேண்டலாம் பயனையும் எதிர்பார்க்கலாம். இன்று எல்லோரும் பல தரப்பட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றார்கள். ஆனால் அதன்படி நடக்கின்றார்களா என்பது தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். வள்ளுவன் கருத்தை நாம் படிப்பதுடன் நில்லாது செயலாற்றவும் வேண்டும்."

செல்வி மஞ்சுளாசத்திய வாகீஸ்வர ஐயரின் இன்னிசைக் கச்சேரியின் பின்னர் செல்வி யோகாம்பிகை வல்லிபுரம் "வள்ளுவரும் நங்கையரும்" என்ற தலைப்பில் பேசும் பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார். "பெண்களுக்கு மட்டும் சில காரியங்களை வள்ளுவர் கூறவில்லை. ஆண்களுக்குமே பொதுவாகக்கூறிப் போந்துள்ளார். சிலர் இதையறியாது ஒரு சாராருக்குத்தான் வள்ளுவர் கருத்துக்கள் ஏற்கும் என்று கூறுவது ஏற்றதல்ல-அத்துடன் உகந்ததுமல்ல இதை நாம் உணரவேண்டும். வள்ளுவன் குறளிலே பல விதமான அரியகருத்துக்கள் பெண்களுக்கு இருக்கின்றன. இதனை நாம் ஓய்வு நேரங்களில் படிப்போமானால் நிச்சயம் வாழ்க்கையிலே எத்தனையோ விதமான பூசல்களையும், பிணக்குகளையும் தீர்த்துக்கொள்ளலாம்"

இறுதிப் பேச்சாளரான திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. "வள்ளுவர் சொல்" என்ற தலைப்பில் பேசுகையில் "வள்ளுவர் தமிழ் மக்களின் இன்றய சூழ்நிலைக்கு ஏற்றாற் போலவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாடிய குறள்கள் எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கின்றது. இந்தக் கருத்துக்கள் தமிழில் இருந்தபொழுதிலும் இக்குறளை பல மொழிகளிலும் மொழிபெயர்த்திருப்பது இக்குறளில் பொதிந்து கிடக்கும் அரும்பெரும் கருத்துக்களையும், அறிவுரைகளையும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அது மாத்திரமல்ல வள்ளுவரின் சொல்லை நம்நாட்டிலும் நமது சிங்கள மொழியில் மொழிபெயர்த்திருப்பது வரவேற்கத்தக்கது. வள்ளுவர், அல்லற்பட்டு விட்ட கண்ணீர் செல்வத்தை தேய்க்கும் படை யென்று குறிப்பிட்டிருக்கின்றார். அதுபோல இன்று தமிழ்மக்களாகிய நாம் கண்ணீர் விடுகின்றோம். அது நிச்சயம் எங்கள் அரசாங்கத்தைத் தேய்க்கும். இதைநான் சொல்லவில்லை. வள்ளுவர் தான் கூறியிருக்கின்றார். இந்த அரசாங்கம் கொடுத்த அவகாசத்தின் பெயரில்தான் நான் திருக்குறளையும், சிலப்பதிகாரத்தையும் படிக்க முடிந்தது. இன்னமும் தருணம் கிடைத்தால் வேறு தமிழ் இலக்கியங்களையும் படிக்கலாம்" என்று கூறினர்.

இரண்டாவதுநாள் விழாவிற்கு திரு. மு. சிவசிதம்பரம் தலைமை தாங்கினர். முதல் நாள் போன்று திருமுறை ஓதியபின்னர் கூட்டம் ஆரம்பமாகியது. "இந்த நாட்டிலே புத்தகங்களை அரசாங்கம் தடை செய்துள்ளது. அதேபோன்று திருக்குறளையும் அரசாங்கம் தடைசெய்துவிடுமோ என்று நாம் ஐயுறவேண்டியிருக்கிறது. திருக்குறள் இன்று உலக இலக்கியங்களிலே ஒரு தனிப் பெரும் இலக்கியமாக விளங்குகின்றது இதை நாம் மறைக்கவோ அன்றேல் மறுக்கவோ முடியாது. வள்ளுவர் குறளைத் தமிழில்தான் இயற்றியிருந்தாலும் இன்று குறள் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுளது. இதனை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் ஜி. யூ. போப் குறளைபற்றிக் கூறியிருப்பதே ஓர் எடுத்துக்காட்டு வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தாலும் அன்றும்-இன்றும்-நாளையும் ஏற்கக்கூடிய கருத்துக்களைத் தனது குறளிலே கூறியிருப்பது அவரின் சிறந்த, ஆழ்ந்த சிந்தனா சக்தியையும் பரந்த அறிவையும் தெளிவுறுத்துகிறது" என்று திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

அடுத்த நிகழ்ச்சியான பட்டிமன்றபத்திற்கு திரு. சோ. நடராசா தலைமை தாங்கினர்.

வள்ளுவரின் கருத்துக்கள் வாழ்க்கை நடைமுறைக்கா? இலட்சியத்திற்கா ஏற்றவை? என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கம் சபையோர்களை பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. "வாழ்க்கை" தரப்பில் பேசிய சாராரும் - "இலட்சியம்" தரப்பில் பேசிய சாராரும் முறையே தங்கள் கருத்தை மறு கட்சியினரும் - மறு கட்சியின் கருத்தை - அடுத்த கட்சியினரும் கூறி விட்டார்கள் என்று கூறிய பொழுது சபையிலிருந்து பெரிய கரகோஷமும் - சிரிப்பும் எழுந்தது. வள்ளுவன் கருத்துக்கள் வாழ்க்கைக்குத் தன் ஏற்றவை என்ற தலைப்பில் திரு. ஈழவேந்தன், திரு சங்கர், திரு. மு. திருநாவுக்கரசு ஆகியோர் பேசினர்கள். வள்ளுவன் கருத்துகள் இலட்சியத்திற்குத்தான் உகந்தவை என்ற தலைப்பில், திரு. வை. சிவப்பிரகாசம், திரு. எஸ். ஜே சந்திரசேகரன், திரு. க குணரத்தினம் பேசினர்கள். ஈற்றில் பட்டி மன்றம் பற்றி தனது தீர்ப்புரையில் திரு சோ. நடராசா குறிப்பிடும் பொழுது, "வள்ளுவன் இன்று இக்கூட்டத்திற்கு வந்திருந்தால் - தான் குறளை இயற்றும் பொழுது இந்தக் கருத்துடன் தான் இயற்றினரோ? அல்லது வேறு விதத்திலோ என்று எண்ண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும். ஆனல் நான் இன்று இங்கு வந்தபடியால் பல புதுவிதமான வியாக்கியானங்களையும் அறிந்துள்ளேன்" என்றார். அடுத்த நிகழ்ச்சியாக திருமதி விக்னேஸ்வரி கைலேஸ்வரனுடைய இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

இந்து வாலிபர் சங்கத்தின் உதவிக்காரியதரிசி சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது சங்கத்திற்கு சைவப்பொதுமக்களின் ஒத்தாசையையும் — ஒற்றுமையையும் வேண்டினர். அத்துடன் சங்கத்திற்கு ஒரு விடுதிச்சாலையொன்றை நிறுவுவதற்கு வீடு ஒன்றினை வாடகைக்குத் தரும்படியும் சமூகம் கொடுத்திருந்த மக்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

"திரு"

## ஐயாறன் எழுதுவது

நீர்கொழும்பைச் சேர்ந்த நல்லதம்பியார் காலமான செய்தியைக் கேட்டு திடுக்கிட்டேன். என்னைப்போல் பல்லாயிரம் உள்ளங்கள் அவரது மறைவைக் கேட்டு கண்ணீர் வடிக்கும்.

சமீபத்தில்தான் அவருக்கு ஜே. பி. பட்டம் கிடைத்தது, அவரது சொந்த ஊரான சருவிலில் பாராட்டு வைபவங்கள் விசேஷமாக நடந்தன. நல்லதம்பி என்றால், உண்மையில் நல்லதம்பியே. பிரபல வியாபாரியான அவர், தம்மிடம் வேலைபார்த்த பலருக்கும் உதவி அவர்களையெல்லாம் குட்டிமுதலாளிகளாக்கியுள்ளாராம். மற்றும் அவரிடம் உதவி பெற்றவர்களுக்குக்கணக்கில்லை

சிறப்பாக நீர்கொழும்பு தமிழ் மக்களுக்கு அவரது பிரிவு எவ்வளவு பெரிய நஷ்டம் தெரியுமா! கொழும்புக்கு தமிழகத்திலிருந்து எந்தப் பேச்சாளர், பிரமுகர் வந்தாலும் சரி, பழியாகக் கிடந்து அவர்களை நீர்கொழும்புக்கு அழைத்துச் சென்று அன்புடன் வரவேற்று உபசரித்துப் பேச வைப்பார். தமிழுக்கும் சைவத்துக்கும் ஒரு நடமாடும் உயிர் நிலயமாக அவர் விளங்கினரென்பது மிகையல்ல.

வயது அவருக்கு 45 தான் இருக்கும். அன்பான அழகான லட்சியக் குடும்பம் அது. அவரது பிரிவை அக்குடும்பத்தார் எப்படித்தான் தாங்குகின்றார்களோ. அவர்களது துக்கத்தை அவர்களுடன் சேர்ந்து பல்லாயிரம் பேர் பங்கிட்டுக் கொள்ளுகின்றார்கள். அக்குடும்பத்தாருக்கும், நீர்கொழும்பு, சருவில் மக்களுக்கும் எனது மனப்பூர்வமான அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக!

* * *

இலங்கைக்கு எவ்வளவோ ஹைகமிஷனர்களும், ஸ்தானிகர்களும், வருகிறார்கள்; போகிறார்கள். ஆனால் கனடிய தூதுவரான ஜேம்ஸ் ஜோர்ஜைப் போல் இங்கு ஏராளமானவர்களின் அன்பைக் கவர்ந்து சென்றவர் மிக மிக அபூர்வம்

அவரது அருமைப் புதல்வி டெல்பியின் பரத நாட்டியத் திறனைப் பற்றி அன்பர் இராமச்சந்திரா நேற்று உணர்ச்சியுடன் விளக்கியிருந்தார்கள். தமிழரின் கலை பண்பாட்டில் அவருக்கும் அவர் குடும்பத்துக்கும் எவ்வளவு மதிப்பும் ஆர்வமுமுண்டென்பதற்கு இது மேலான அத்தாட்சி.

தமது பதவியிலிருந்து நீங்கி தாயகம் திரும்புமுன், கொழும்புத்துறை முனிவரையும், செல்லச்சன்னிதியிலுள்ள ஜெர்மன் சுவாமியாரையும் தரிசித்து ஆசிபெறுவதற்காக இன்று அவர் தமது குடும்பத்தாருடன் யாழ்ப்பாணம் வருவதாக அறிந்தேன்.

தமிழகத்திலுள்ள பல இந்துக் கோவில்களுக்கும் ஜெர்மன் சுவாமியாரின் துணையுடன் அவரும் அவரது குடும்பத்தாரும் பக்தியுடன் சென்று தரிசித்து வழிபட்டுள்ளனர்.

நமது அன்பையும், அழகான கலைச்செல்வத்தையும் அமோகமாகக் கொண்டுசெல்லும் ஹைகமிஷனர் ஜோர்ஜ் குடும்பத்தார், நீடூழி வாழவேண்டுமென்றும் அடிக்கடி இங்கு வந்து இருதேச நல்லுறவையும் பலப்படுத்த வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

* * *

நேற்று ஓரன்பர் தம் வீட்டில் டொமட்டோ (தக்காளி) ஜாம் சரிக்கட்டியதாகக் கூறி ஒரு சாம்பிள் கொடுத்தார். ஹல்வா மாதிரி மிக நேர்த்தியாக இருந்தது, இறக்குமதிச் சரக்கைவிடவும் மேலாக இருந்தது அது.

இப்போது யாழ்ப்பாணத்தில் தக்காளி மிகவும்மலிவாம். இவ்விதம் பெரிய அளவில் சரிக்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கட்டினால், வேறு இடங்களுக்கும், வெளிநாடுகளுக்கும்கூட லாபகரமாக அனுப்பிவைக்கலாம். இங்குள்ள இயற்கைச் செல்வங்களையும், மக்களின் திறமைகளையும் தக்கபடி பயன்படுத்துவதாயின் யாழ்ப்பாணம் முன்னேற எவ்வளவோ இடமுண்டு. இன்றுள்ள அரசியல் நிலையையே நினைத்துக் கொண்டு கவலைப்படுவதை விட்டு, இவ்வித உருப்படியான காரியங்களில் ஈடுபட முன்வருபவர்கள், தங்களுக்கும், நாட்டுக்கும் மேலான நன்மை செய்துகொண்டவர்களாவர்.

* * *

விண்ணவனை மேருவில்லா வுடையான் தன்னை மெய்யாகிப் பொய்யாகி விதியானானைப், பெண்ணவனை ஆணவனைப் பித்தன் தன்னைப் பிணமிடுகாடுடையானைப் பெருந்தகையோனை, எண்ணவனை எண்டிசையும் கீழும் மேலும் இருவிசும்பும் இருநிலமுமாகித் தோன்றும், கண்ணவனைக் கஞ்சனூராண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே.

— திருநாவுக்கரசர்

சைப்ரஸ் நெருக்கடி

# 5 நாடுகள் தீர்மானம் நிறைவேறியது

## சர்வதேசப்படையும், மத்தியஸ்தரும் நியமிக்க பாதுகாப்புசபை முடிவு

## அமெரிக்க ஜனதிபதி வரவேற்பு

நியூயோர்க், மார்ச் 5

**சைப்ரஸில் சர்வதேச சமாதானப்படை ஒன்றை அமைக்கவும், மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்கவும் ஐ. நா.வைக் கேட்டுக் கொண்டு 5 நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை பாதுகாப்புச் சபை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.**

பாதுகாப்புசபையின் 5 தற்காலிக அங்கத்துவ நாடுகள் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தன. பிரிட்டன், கிரீஸ், துருக்கி, சைப்பிரஸ் ஆகிய நாடுகளைக் கலந்து கொண்டு ஐ. நா. தலைமைக் காரியதரிசி இந்தப் படையை அமைப்பார். 3 மாதங்களுக்கு சர்வதேசப் படைசைப்ரஸில் நிலை கொண்டிருக்கும் படையின் தளகர்த்தரும்மத்தியஸ்தரும சம்பந்தப்பட்டநாடுகளுடன் ஆலோசனை கலந்தபின் தலைமைக் காரியதரிசியினால் நியமிக்கப் படுவார்கள்.

8 நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பேசுகையில், சைப்பிரஸ் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்துபூரணமாகச் சபைக்கு அறிவிக்கப்படும் என வாக்குறுதியளித்தார்.

பாதுகாப்பு சபையின் முடிவை அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸன் வரவேற்றிருக்கிறார். சைப்பிரஸிலுள்ள துருக்கியர்களும் வரவேற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

# அகதிகள் வெளியேற்றம் குறித்து ராஜ்யசபை விவாதம்

## டில்லியில் திருச்சபை தலைவர்கள் கவலை

புதுடில்லி, மார்ச் 5

பாகிஸ்தானிலிருந்து சிறுபான்மையினர் தொடர்ந்து வெளியேறி வருவதுகுறித்து ராஜ்யசபையில் விவாதம் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் அங்கத்தினர் திரு. பூபேஷ்குப்தா பேசுகையில் இந்த விஷயம் சர்வதேசப் பிரச்னையாகிவிட்டதாயும் மனிதஉரிமை மீறப்பட்டிருப்பதாயும் குறிப்பிட்டார்.

மத்திய அகதிகள் புனரமைப்பு மந்திரி திரு. மேஹர்சந்த் கன்னு நேற்று அஸ்ஸாமிலுள்ள காரோஹில்லிலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்தார். இன்று அவர் தண்டகாரண்யம் புறப்படுகிறார்.

அஸ்ஸாமிற்குள் இப்போது வந்துள்ள 80000 அகதிகளின் தொகை விரைவில் 1,50,000 ஆகிவிடும் என அவர் கூறினார்.

இதற்கிடையில் டில்லியிலுள்ள கிறிஸ்தவ திருச்சபைத் தலைவர்கள் கூடி கிழக்குபாகிஸ்தானிலிருந்து கிறிஸ்தவர்கள் வெளியேற்றம் குறித்து கவலை தெரிவித்தனர். இதுபற்றி உலக திருச்சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

## அமெரிக்கரின் சைக்கிள் மோகம்

நியுயோர்க், மார்ச் 5

அமெரிக்காவில் கோடிக் கணக்கான கார்கள் பெருகியுள்ளபோதிலும் இங்குமங்கும் செல்லவும் உடலைக் கட்டாக வைத்திருக்கவும் அமெரிக்கர்கள் சைக்கிளைப் பெரிதும் விரும்புகின்றனர்.

இப்போது அங்கு 3 கோடி சைக்கிள்கள் பயனில் உள்ளன. பிரிட்டிஷ் சைக்கிள்களையே அவர்கள் அதிகம் விரும்புகின்றனர்.

## பக்தவத்சலத்துக்குப் புதிய கார்

சென்னை, மார்ச் 5

திரு. பக்தவத்சலம் முதன் மந்திரியாகிய பின்பும் நான்கு மாதங்களாக தாம் முன்பு உபயோகித்துவந்த பச்சைநிற "செவர்லே" காரையேஉபயோகித்து வந்தார். இப்போது அவர் புதிய "டாட்ஜ்" ரக காரை உபயோகிக்கிறார். அவரது பழையகார் தொழில்மந்திரி திரு. வெங்கட்ராமனுக்கு கொடுக்கப்பட்டது.

## சீனவுக்கு பார்லி விற்பனை

வின்னிபெக், மார்ச் 5

185 லட்சம் பவுன் மதிப்புள்ள 163 லட்சம் புஷல் பார்லியை, கனடா சீனவுக்கு விற்க இருக்கிறது.

## நிக்ஸன் யோசனை

நியூயோர்க், மார்ச் 5

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் உயர்தலைவர்கள் கூடி, ரஷ்யா, செஞ்சீன ஆகிய நாடுகளுக்கெதிராக ஓர் ஒருமுகக்கொள்கையை வகுக்கவேண்டும் என முன்னாள் அமெரிக்க உப ஜனதிபதி திரு. ரிச்சார்ட் நிக்ஸன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## இரு சமுத்திரங்களை இணைக்க முயற்சி?

வாஷிங்டன், மார்ச் 5

அட்லாண்டிக் சமுத்திரத்தையும் பசிபிக் சமுத்திரத்தையும் பிரிக்கும் இஸ்தமஸில் புதிய கால்வாய் ஒன்றை அமைத்து இரண்டையும் இணைக்கும் சாத்தியம்பற்றி ஆராயுமாறு ஜனதிபதி ஜோன்ஸன் அமெரிக்க காங்கிரஸைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## மாணவர்களுக்கு ஆபத்து

புஜபிட்டிய, வியாழன்

பற்றுகொட அரசாங்கபாடசாலை முற்றாகப் பழுதடைந்துள்ளதால் அங்கு கல்வி கற்கும் 250 மாணவர்களின் உயிர் ஆபத்தான நிலையிலிருக்கிறது. பெற்றோர்கள் பலர் தலைமை ஆசிரியருக்கு இதுபற்றி புகார் செய்துள்ளார்கள்.

## அமெரிக்க பொருளாதாரம்

வாஷிங்டன், மார்ச் 5

1964-ம் ஆண்டுக்கான அமெரிக்காவின் பொருளாதார நிலை மிக நன்றாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. சமீபத்தில் அமெரிக்க மக்களுக்கு 1150 கோடி டாலர் வருமானவரி குறைக்கப்பட்டது.

## ஜோன்ஸன் —வில்சன் பேச்சு

வாஷிங்டன், மார்ச் 5

அமெரிக்கஜனதிபதி ஜோன்ஸனும் பிரிட்டிஷ் எதிர்கட்சித் தலைவர் திரு. வில்சனும் 50 நிமிடம் உலகப்பிரச்னை குறித்து சப்பாஷணை நடத்தினர்கள். திரு. வில்சன் வெளிநாட்டு மந்திரி திரு ரஸ்குடனும், பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாராவுடனும் ஏற்கனவே சம்பாஷணை நடத்தியிருக்கிறார்.

## பிரிட்டிஷ் துருப்புக்கள் திரும்பும்

சம்பாலா, மார்ச் 5

கடந்த ஜனவரி 25-ம் திகதி உகண்டாவில் எழுந்த ராணுவக் கலகத்தை அடக்கும்பொருட்டு அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் துருப்புக்கள் வருகிற 25-ம் திகதி கென்யாவிலுள்ள தங்கள் தளங்களுக்குத் திரும்பவிருக்கின்றன.

## 5 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர் ஊடுருவ முயன்றனர்?

புதுடில்லி, மார்ச் 5

காஷ்மீர் எல்லையிலும், இதர பகுதிகளிலும் பாகிஸ்தான் படை நடமாட்டம் குறித்து கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாய் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறியிருக்கிறார். பாகிஸ்தானியர் சீனர்களால் பயிற்றுவிக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினர்.

இதற்கிடையில் ஜம்மு எல்லையில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானியர்மீது இந்திய வீரர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் 5 பாகிஸ்தானியர் மாண்டனர். இந்தியத் தரப்பில் எவருக்கும் சேதமில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஐ நா. பார்வையாளர்கள் சென்றுள்ளனர்.

காஷ்மீர்

## சிரேஷ்ட பதவிகள்

ஸ்ரீநகர், மார்ச் 5

காஷ்மீர் அரசாங்கம் பிரதம காரியதரிசி, கமிஷனர் ஆகிய இரு சிரேஷ்ட அதிகாரிகளை நியமித்திருக்கிறது; நிர்வாகத்தைப் பலப்படுத்துமுகமாகவே இந்த நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

## பாக்.—சீன வியானப் போக்கு

டோக்கியோ, மார்ச் 5

பாகிஸ்தான் சீன விமானப் போக்குவரத்து ஜப்பான் வழியாக நடைபெற அனுமதி அளிக்கப்படவில்லைஎன டோக்கியொவில் அறிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக ஜப்பான் பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துமென்றும் அறிவிக்கப்பட்டது.

## கென்னடி நூல்நிலையம்

வாஷிங்டன், மார்ச் 5

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கென்னடி ஞாபகார்த்த நூல்நிலையம் அமைப்பதற்கு வெனிசூலா 1 லட்சம் டாலர் கொடுத்துதவும் என அறிவிக்கப்பட்டது.

# அசோக் மேத்தா ஆதரவாளர் மகாநாடு

## தமிழ்நாட்டில் நடைபெறும்

சென்னை, மார்ச் 5

தமிழ் நாட்டிலுள்ள அசோக் மேத்தாவின் ஆதரவாளர்கள் மகாநாடொன்று இம்மாதம் நடைபெறுமென்றும், எதிர்கால நடவடிக்கைகள் பற்றித் திட்டம் வகுக்கப்படுமென்றும் பிரஜாசோஷலிஸ்ட் பிரமுகர் ஒருவர் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்தியா பூராவிலுமுள்ள அசோக்மேத்தாவின் ஆதரவாளர் கூட்டம் டில்லியில் நடைபெற்றபோது தமிழ் நாட்டின் சார்பில் திருவாளர்கள் வி. ஆர். ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை வேதாசலம், திருச்சி டி. கே. ரங்கசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். டில்லிக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் சார்பில் ஒரு கோஷ்டி காங்கிரஸ் அக்ராசனரைக் கண்டு பேசியது. காமராஜரின் பதில் அக்கோஷ்டியினருக்கு திருப்தியளித்தது. தமிழ் நாட்டில் நடைபெறும் மகாநாட்டிற்கு முன்பு உத்தரப் பிரதேசத்தில் அகில இந்திய ரீதியில் ஒரு மகாநாடு நடைபெறும். அரசியல் வட்டாரங்களில் இம்மகாநாடு குறித்து மிகவும் முக்கியத்துவம் காட்டப்படுகிறது.

காங்கிரஸ்அக்ராசனர் காமராஜின் சோஷலிஸசக்திகளைத் தம் காங்கிரஸில் சேரவேண்டுமென்ற அழைப்புப் பற்றியும், சோஷலிஸ்ட் கட்சி-பி. சோ. இணைப்புப் பற்றியும் அசோக் மேத்தாவை கட்சியிலிருந்து நீக்க கட்சித்தலைமை மேற்கொண்ட போக்கு பற்றியும் மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

# ஹிட்லரின் அதிகாரி அர்ஜண்டீனவில் கைது

## விசாரணைக்கு ஒப்படைக்குமாறு மேற்கு ஜெர்மனி கோரிக்கை

புவனஸ்அயர்ஸ், மார்ச் 5

அடோல்ப் ஹிட்லரின் "ஜீவ காருண்யக் கொலை"யில் சம்பந்தப்பட்டதாகக் கருதி சென்ற வாரம் கைதுசெய்யப்பட்ட முன்னாள் நாஸி அதிகாரி ஜெர்காட்போன், தாம், பதிவுப்புத்தகத்தில் கொலை பற்றிய விபரங்களைப் பதியும் புள்ளிவிபர வேலையை மட்டுமே செய்து வந்ததாகக் கூறியதாக அறிவிககப்படுகிறது.

போன் இப்போது புவனஸ் அயர்ஸ் சிறை ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறார். விசாரணைக்காக அவரை மேற்கு ஜெர்மனியிடம் ஒப்படைககுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அர்ஜண்டீன அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

வெளியேற்ற முயற்சியை எதிர்க்கும் பொருட்டு அர்ஜண்டீன வழக்கறிஞர் ஒருவரை திரு. போன் அமர்த்திக் கொண்டிருக்கிறார். 58 வயதான இந்தக் கைதியை படம் பிடிக்கவோ, அல்லது பேட்டி காணவோ பத்திரிகையாளர்களுக்கு அனுமதி அளிக்க நீதிபதி மறுத்துவிட்டார்

ஊனமுற்றவர்கள், மனக்கோளாறு உள்ளவர்கள் ஆகியோரைத் தீர்த்துக் கட்டி, ஜெர்மானிய இனத்தை பரிசுத்தப்படுத்தும் ஹிட்லரின் ஜீவ காருண்யக்கொலையில் சம்பந்தப்பட்ட நான்கு பேரில் போனும் ஒருவர் என அறிவிக்கபபடுகிறது.

## மலேசிய பிரச்னை ஐ. நா. செல்லும்

கோலாலம்பூர், மார்ச் 5

பாங்காக்கில் நடைபெற்ற மலேஷியப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துவிட்டதால், இப்பிரச்னை ஐ. நா.வுக்கு எடுத்துச்செல்லப்படுமென பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர்.

இந்தோனேஷிய கொரில்லா நடவடிக்கை,தினமும் அதிகரித்துவருவதாய் உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் கூறினர்.

எல்லையிலிருந்து கொரில்லாக்கள் வாபஸ்பெறவேண்டுமென்ற மலேஷியாவின் பிடிவாதம் காரணமாகவே பாங்காக் மகாநாடு முறிவுற்றதென இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

## இந்தியா நன்றி

புதுடிலலி, மார்ச் 5

கடற்படை ஒத்திகையின் போது கோளாறுக்குள்ளான இந்திய விமானம் இறங்குவதற்கு அனுமதியளிததற்காக இந்திய அரசாங்கம் இலங்கைககு நன்றி தெரிவித்திருக்கிறது.

## மனிதர்களாக வாழவேண்டும்

ஸான்ஸிபார், மார்ச் 5

சகல மக்களும் மனிதர்களைப் போல் வாழக்கூடிய புதிய ஸான்ஸிபாரைச் சிருஷ்டிப்பதே தனது அரசாங்கத்தின் நோக்கமென ஜனதிபதி கருமே கூறினர்.

## அணுசக்தி நிபுணர் கைது

ரோம், மார்ச் 5

இத்தாலிய அணுசக்திக் கமிஷனின் பிரதம காரியதரிசி பதவியிலிருந்து கடந்த ஆகஸ்ட் மாதம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் பிலிஸ இபபோலிடோ பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். தனது பதவியை, தனிப்பட்ட நலன்களுக்குப் பயன்படுத்தியதாய் அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

## அமெரிக்கா தொடர்ந்து எதிர்க்கும்

வாஷிங்டன் மார்ச் 5

சீன ஐ. நா. வில் அங்கத்துவம் வகிப்பதை அமெரிக்கா தொடர்ந்து எதிர்த்துவரும் என அறிவிக்கப்பட்டது.

## கிரேக்கமன்னர் நிலை மோசம்

ஏதென்ஸ, மார்ச் 5

62 வயதான கிரேக்கமன்னர் பாலின் தேகநிலை மிக அபாயகட்டத்தை அடைந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## என்ஜினியர்களுக்கு லீவு இல்லை

கொள்ளுப்பிட்டி, வியா.

மின்சார இலாகா என்ஜினியர்களின் லீவு ரத்துச் செய்யப்பட்டுளளது. லீவில் சென்றுள்ள என்ஜினியாகள் சேவைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

# மலைநாட்டுக் காணிகளை தமிழர் வாங்குகிறார்களாம்

## சிங்களப் பத்திரிகை ஓலம்

கொழும்பு, வியாழன்

மலைநாட்டிலுள்ள அதிகமான நிலங்கள் வெளிநாட்டவர்களுக்குத்தான் சொந்தமாகவிருக்கின்றன. இந்த நிலங்கள் விற்பனை செய்யப்படும்பொழுது அவற்றை படிப்படியாகதமிழர்கள் தான் விலைக்கு வாங்குகிறார்கள் என்று நேற்று வெளியான தவஸ என்ற சிங்களப் பத்திரிகை தனது தலையங்கத்தில் குறுப்பிட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது: இலங்கையரல்லாதவர்களால் விற்பனை செய்யப்படும் நிலங்களைவாங்கி இலங்கையர்களுக்கு கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். கிராமத்தை விஸ்தரிப்பதற்காக இக்காணிகளை வழங்குவது சம்பந்தமாக அரசாங்க அதிபர்களுக்கும் காணி கமிஷனர் இலாகாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

பிரிட்டிஷாரின் ஆட்சியின் போது ஏற்பட்ட தெற்காணி வரி சட்டத்தின் காரணமாகவும் பயிர்செய்யப்படாத நிலங்களின் சட்டத்தின் காரணமாகவும் சிங்கள மக்கள் கட்டாயத்தின்பேரில் தங்கள் நிலங்களை அந்நியர்களுக்கு விற்ருர்கள். அரசாங்கத்திலுள்ளோர் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் தொழிலாளர்களை கொண்டு வந்து தோட்டங்களில் வேலைக்கமர்த்தினர்கள், இதை தடை செய்யும் பொருட்டு சிங்கள மக்கள் திரும்பவும் தங்கள் சொந்த நிலங்களில் குடியேற சந்தர்ப்பமளிப்பது மிக மகிழ்ச்சியுடன் வரவேற்க கூடியதாகும்.

இந்தநிலங்களை மட்டுமன்றி அரசாங்கத்துக்கு சொந்தமான காட்டுநிலங்களையும் இப்பகுதியிலுள்ள நிலமில்லாதமக்களுக்கு பகிர்ந்துவழங்கவேண்டும். திட்டங்களும் தீர்மானங்களும் பேச்சளவில் இருப்பது தான் வழக்கமானலும் தற்பொழுதுள்ள திட்டத்தைக் கூடிய சீக்கிரத்தில் செயல்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

# "மக்களின் கஷ்டத்தை டாக்டர்கள் உணரவேண்டும்"

கொழும்பு, வியாழன்

ஒருவாரமாக தொடர்ந்து நடைபெற்றுவரும் வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்தம் தனிப்பட்ட தொழில் நடத்தும் பிரச்னையில் தங்கியுள்ளது என்று இம்மாதம் 3-ம் திகதி "ஜனதா" என்ற சிங்களப்பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அந்த தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த நாட்டிலுள்ள மக்களிடையே மேல்நாட்டில் பயின்ற டாக்டர்களுக்கு அதிக மதிப்புண்டு. கல்வி அறிவு பெற்றவர்கள் என்று கருதப்படும் அவர்கள் சமாதான வழியில் தீர்த்துக் கொள்ள கூடிய விஷயத்தில் கடுமையான முறையை கடைபிடிப்பது வரவேற்கக் கூடிய தொன்றல்ல.

ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சாதாரண தொழிலாளிகள், டாக்டர்களிலும் பார்க்க தங்களுக்கு அதிக பிரச்னை இருப்பதாகவும், ஆனல் சாதாரண பொதுமக்கள் துன்பப்படுவார்களே என்ற காரணத்தால் தாங்கள் வேலைநிறுத்தம் செய்யவில்லையென்றும் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்கள். சாதாரணத் தொழிலாளர்களின் அறிக்கை, டாக்டர்களுக்கு வெட்கத்தை கொடுக்க கூடியது. வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தை இனி மேலும் தொடர்ந்து பாவிப்பது டாக்டர்களுக்கு உகந்தல்ல. பொது மக்களின் பணத்தில் படித்து பட்டம்பெற்று நாட்டிற்கு கடனாளியானவர்கள், மக்களின் கஷ்டங்களை சிந்தித்துபார்க்க வேண்டும்."

பல்கலைக்கழக

# மாணவனுக்கு ரூ. 100 அபராதம்

பேராதனை, வியாழன்

பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கு உபவேந்தர் சர். நிக்லஸ் அட்டிகல நூறுரூபா அபராதமும இருவாரத்துக்கு பல்கலைக்கழகத்தில் அனுமதிக்க முடியாத வகையில் தடையும் விதித்துள்ளார்.

பல்கலைக்கழகத்திலுள்ள பொருளாதாரப் பகுதியிலுள்ள அடையாளப் பலகையைச் சேதப்படுத்தியதற்காகவே அம்மாணவனுக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது. இம் மாணவன அடையாளப்பலகை மீது கற்களை வீசியதாகக்கூறப்படுகிறது.

# "பிலிப்பின் எச்சரிக்கைகள் பின்பற்றியிருந்தால் பலன் கிடைத்திருக்கும்"

கொழும்பு, வியாழன்

இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளில் திரு. பிலிப் குணவர்த்தன முக்கிய இடம் பெற்றுள்ளார் என்று சென்ற மாதம் 29-ம் தேதி மகாஜன எக்சத் பெரமுன என்ற சிங்கள பத்திரிகை தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது: சிட்னி டீ சொய்ஸா அரசாங்கத்திற்கு எதிராக இருந்து வருகிறார் என்று திரு. குணவர்த்தன அரசாங்கத்திற்கு எச்சரிக்கைசெய்தபோது, அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஆனல் சிட்னி டீ சொய்ஸா இன்று புரட்சி சதிவழக்கில் கைதாகி சிறையிலிருக்கின்றார்.

1958-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி பாராளுமன்றத்தில், புத்தரகித்த தேரோவை, மஞ்சள் அங்கியுடன் திரியும் ஒரு வியாபாரியென்றும், மஞ்சள் அங்கிக்குள் அவர் துப்பாக்கி கொண்டுதிரிகிருரென்றும் திரு. பிலிப் குணவர்த்தன அரசாங்கத்தை எச்சரித்தார். ஆனல் சுதந்திர கட்சியிலுள்ள திரு. சி. பி. டி. சில்வா, திரு. மைத்திரிபால சேனநாயக்கா போன்ற தலைவர்கள் இதனல் அதிகம் கலவரயடைந்தார்கள். இன்று புத்தரகித்த தேரோ பிரதம மந்திரியை கொலை செய்தது சம்பந்தமாக சிறையிலிருக்கிறார்.

இந்த அரசாங்கத்தைகவிழ்ப்பதற்காக, திரு. டட்லி சேனநாயக்காவிற்கும், சர் ஜோன் கொத்தலாவலைகுமிடையில் நடைபெற்ற இரகசிய பேச்சவார்த்தைகள்பற்றி திரு புலிப் குணவர்த்தன தெரிவித்தார். இது சம்பந்தமாக தனக்கு முழு ரகசியங்களும் தெரியுமென்று பகிரங்கமாகவும் அவர் கூறினர். ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்கு கொண்டுவரவிருக்கும் கோஷ்டி சிறிதாகவிருந்தாலும் பலமுள்ளதாக இருக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் போது பயனடைந்தவர்கள், மீண்டும் பயனடைவதற்காக ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர முயற்சிக்கிருர்கள்.

# கொழும்பில் மழை

கொழும்பு, வியாழன்

கொழும்பில் கடந்த சில தினங்களாக மாலை நேரங்களில் பலத்த மழை பெய்து வருகின்றது.

# தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த விழா

நீர்கொழும்பு, வியா

நீர்கொழும்பு முன்னக்கரை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்க வருடாந்த விழா அண்மையில் வண. உதவி கட்டளைக் குரு பிதா. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் நீர்கொழும்புத் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. டி. குயின்றின் பெர்னாண்டோவும் கலந்து கொண்டார்.

தலைவர் தமது தலைமையுரையில்; பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே நெருங்கிய உறவுகள் இருக்கவேண்டுமென்றும் மாணவர்களின் கல்வி விஷயத்தில் ஆசிரியர்கள் எவ்வளவு கவனம் செலுத்துகிறார்களோ அது போல பாடசாலையின் முன்னேற்றத்தில் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டுமென்றும் கூறினர்.

காரியதரிசி திரு. கே. எஸ். ஜோண் லவுறேந்தி பெர்னாண்டோ, சங்க வருடாந்த அறிக்கையை வாசித்த பின்னர் வித்தியாதரிசி திரு. என். ஏ. எச். எம். தகா உரையாற்றுகையில்; பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையே நிலவும் நெருங்கிய உறவுகளில்தான் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தங்கியிருக்கிறது என்று கூறினர். பெரியமுல்லை மகா வித்தியாலய அதிபர் திரு. எஸ். எம். ஏ. ஜப்பார், திரு. மாட்டின் லீமா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். திரு. பேடினன் பெர்னாண்டோவினல் பாடசாலை வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டபின்னர் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி குயின்றின் பெர்னாண்டோ பரிசுகள் வழங்கினர்.

அன்று மாலை நடைபெற்ற சுதம்ப விளையாட்டுகள் வட்டார வித்தியாதரிசினதும், நீர்கொழும்பு மாநகரசபை முன்னக்கரை அங்கத்தவர் திரு. ஒஸ்டின் பெர்னாண்டோவினதும் தலைமையில் நடைபெற்றன.

சுதம்ப நிகழ்ச்சிகளில் தமிழ் நடனங்களுடன் சிங்கள, ஆங்கில நடனங்களும் நடைபெற்றன. பாடசாலை தலைமையாசிரியர் திரு. அலெக்ஸாண்டர் பெர்னாண்டோ நன்றி கூறினர்.

# தனித்தனி பாடங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க பரீட்சைப் பகுதிப் பாடத்திட்டப்பகுதியினர் 1965 லிருந்து க. பொ. த. உயர் வகுப்புக்கு வர்த்தகம், கணக்கியல் ஆகிய இரு பாடங்களும் தனித்தனியாக நடைபெற ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இதுவரையும் இரு பாடங்களும் ஒருமித்தே நடத்தப்பட்டுவந்தன என்பது குறிப்பிடத்தக்கன. இப்பாடங்களைப் பல்கலைக்கழக புகுமுகவகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்ப்பிக்க முயற்சி செய்வதென வர்த்தகக் கலைமன்றம் முடிவு செய்துள்ளது.

# ப. நோ. கூட்டுறவு சங்கத்துக்கு காணி

எருக்கலம்பிட்டி, வியாழன்

பனங்காமம் செல்வநாயகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு குறிப்பிட்ட இடத்தில் காணி வாங்குவதற்கு மேற்படி சங்கத் தூதுகோஷ்டியுடன் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. வி. அ. அழகக்கோன் ஆகியோர் வீடமைப்பு மந்திரியையும் காணி அபிவிருத்தி மந்திரியையும் நேரில் பேட்டி கண்டதன் பயனக மேற்படி சங்கத்திற்கு ஒரு ஏக்கர் காணி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சங்கத் தூது கோஷ்டியில் திரு காசிப்பிள்ளையும் திரு. தி குலசேகரமும் அங்கம் வகித்தனர்.

இ. போ. ச.

# பஸ் சாரதிகளுக்கு பரிசுத்திட்டம்

## விபத்துகளில் சிக்காதவர்களுக்கு பணமும் பதக்கமும் கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

விபத்துகள் எதிலும் சிக்கிக்கொள்ளாமல், கவனமாக பஸ்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு ஒவ்வொரு வருடமும் நட்சத்திர சின்னங்களை வழங்க இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்வந்துள்ளது.

தினசரி அதிகரித்து வரும் பஸ் விபத்துகளை குறைத்துக் கொள்ளும்பொருட்டு பஸ் சாரதிகளுக்கு இந்த வகையில் ஒரு ஊக்கத்தையளிக்க இ. போ. சபை முடிவுசெய்துள்ளது.

இ. போ. ச. சாரதிகளுக்குரிய நட்சத்திர சின்னங்கள் பின்வரும் நிபந்தனைகளின் பேரில்வழங்கப்படும்.

* ஒரு வருடத்தில் அவர் 280 நாட்கள் வேலைசெய்திருக்க வேண்டும். * பஸ் விபத்துகள் எதிலும் அவர் சிக்கிக்கொள்ளக்கூடாது. * இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒழுங்குமுறைச் சட்டங்களுக்குக் கீழ் அவர் எந்தவிதமான பாரதூர குற்றங்களும் செய்திருக்கக்கூடாது. * தொடர்ச்சியாக மூன்று வருடங்களிலும் மூன்று நட்சத்திர சின்னங்கள் பெறுபவருக்கு போனஸ் பணமாக 250 ரூபாய் வழங்கப்படும்.

தவிர, தகுதிபெறும் இ. போ. ச. பஸ் சாரதிகளுக்கு வெண்கலம், வெள்ளி, தங்கப் பதக்கங்களும் வழங்கப்படும்.

ஐந்து வருடங்களுக்குத் தொடர்ச்சியாக நட்சத்திர சின்னங்கள் பெறும் பஸ் சாரதிகளுக்கு வெண்கலப் பதக்கமும், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் பெறும் சாரதிகளுக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் தொடர்ச்சியாக பதினைந்து வருடங்களுக்கு நட்சத்திர சின்னங்கள் பெறும் திக்கு தங்கப் பதக்கமும் பரிசாக வழங்கப்படும்.

வெள்ளி, தங்கப் பதக்கங்களைப் பெறும் பஸ் சாரதிகளுக்கு மேலதிகமாக 1500 ரூபாய் போனஸ் பணமும் கிடைக்கும்.

# ஒரு லட்சம் வார்த்தைகள்

கொழும்பு, வியாழன்

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் ஒரு லட்சத்து மூவாயிரம் வார்த்தைகள் கொண்ட செய்திகள் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தவிர 120 புகைப்படங்களும் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு மேற் கூறப்பட்ட பிரசுரனோத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# "அழுத குழந்தையின் கழுத்தை நெரித்தார்"

## கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் மகள் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு நேற்று முன் தினம் மாலை நீதிபதி அரசுவாலிடன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரியாகிய கதிரன் செல்லனின் மகள் சரசுவதி சாட்சியமளித்தார்.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டிற்குள் பொது மக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஏராளமான மக்கள் கோர்ட்டிற்கு வெளியே திரண்டிருந்தனர்.

இவ் வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர் அவரின் மகள் சரசுவதியின் குழந்தையைக் கொலைசெய்ததாகவும், குழந்தையின் பிறப்பை மறைத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், திரு ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. ராஜநாயகம் வழக்கை நடத்தினர்.

16 வயதுள்ள எதிரியின் மகள் சரசுவதி சாட்சியமளித்த போது கூறியதாவது:-

எதிரி எனது தகப்பனர். எனது தாயார் இரு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். எனது சகோதரன் தங்கராசா ஊமை. எனக்கு நான்கு வயதுடைய தம்பி தர்மராசாவும், 13 வயதுடைய தங்கை தனபாக்கியவதியும், 6 வயதுடைய தங்கை குணவதியும் இருக்கிறார்கள். எல்லோருக்கும் நான்தான் உணவு சமைத்துக்கொடுப்பேன். நாங்கள் எல்லோரும் ஒரு வீட்டில்தான் இருந்தோம்.

1963-ம் ஆண்டு தைமாதம் எதிரியாகிய எனது தகப்பனர் மதுபானம் அருந்திவிட்டு வீட்டுக்கு வந்தார். எனக்குச் சாராயம் கொடுத்தார், நான் குடிக்க மறுத்தபோது குடிக்கும்படி பயமுறுத்தினர். நானும் குடித்தேன். அதன் பின் நான் நித்திரையாகிவிட்டேன். இரவு 10 மணிபோல் யாரோ என்மீது தொடுவதை உணர்ந்தேன். நான் திடுக்கிட்டுப் பார்த்த பொழுது எனது தகப்பனர் அருகில் இருந்தார் "என்ன?" என்று கேட்டேன். அவர் "ஒன்றுமில்லை"என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இச் சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்பும், தகப்பனர் அப்படி நடந்துகொண்டார். அதன்பின் பல மாதங்கள் என்னுடன் தகாதமுறையில் நடந்துகொண்டார்.

1963-ம் ஆண்டு சித்திரை மாதம் நான் கர்ப்பம் தரித்தேன். 64-ம் ஆண்டுதைமாதம் 22-ந் திகதி நான் ஒரு பிள்ளையைப் பெற்றேன். அதற்கு இரண்டுதினங்களுக்கு முன் எனது தகப்பனரிடம் வயிறு நோவதாகக் கூறினேன். அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகமுடியாதென்றும், ஒருவருக்கும் சொல்லக்கூடாதென்றும் கூறினர். இரவு 8 மணிக்கு நான் பிள்ளையைப் பெற்ற சமயம் எனது தகப்பனரும் பக்கத்தில் இருந்தார். பிள்ளை பிறந்ததும் அழுதது. எனது தகப்பனர் பிள்ளையை எடுத்து அருகில் வைத்துக்கொண்டு முகத்தையும், கழுத்தையும் அழுத்தி நெரித்தார். அதன் பின் குழந்தையை கால்சட்டையால் சுற்றி உமலுக்குள் போட்டுக்கொண்டு போய்விட்டார். இரண்டு நாட்களின் பின் பொலிஸார் வந்து என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்கள். டாக்டர் என்னை பரிசோதித்தார் (ஆஸ்பத்திரியில் நீதவானிடம் வாக்குமூலம் கொடுத்தேன்.

இம்மாதம் 11-ம் திகதிவரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# உடற் பயிற்சி போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற பருத்தித்துறை மாவட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

16 வயதுக்குட்பட்ட ஆண்கள் 'பி' பிரிவு: புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை.

13 வயதுக்குட்பட்ட ஆண்கள் 'பி' பிரிவு: கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், வராத்துப்பளை இந்து தமிழ்ப் பாடசாலை. 'பி' பிரிவு பெண்கள்: கரணவாய் வடக்கு இந்துக்கல்லூரி, வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலை.

16 வயதுக்குட்பட்ட பெண்கள்: வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் 'ஏ' பிரிவு: உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, தேவரையாளி இந்துக்கல்லூரி, கட்டைவேலி ஞானசாரியார் பாடசாலை.

16 வயதுக்குட்பட்ட ஆண்கள்: கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி.

13 வயதுக்குட்பட்ட ஆண்கள்: விக்கினேஸ்வரக் கல்லூரி, நெல்லியடி அரசினர் மத்திய மகா வித்தியாலயம், கட்டைவேலி ஞானசாரியார்.

18 வயதுக்குட்பட்ட பெண்கள்: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

16 வயதுக்குட்பட்ட பெண்கள்: உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி.

19 வயதுக்குட்பட்ட பெண்கள்: வேறு கல்லூரிகள் போட்டியிடாததால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியே முதலாமிடத்தைப்பெறறது.

வெற்றிபெற்ற கல்லூரிகளுக்காகிய கற்சாட்சிப் பத்திரங்களை பருத்தித்துறைப் பகுதி வித்தியாதரிசி திரு. முத்துலிங்கம் வழங்கினர்.

# நல்லூர் கிராமசபை தேர்தல்

## 12 வட்டாரங்களில் 38 பேர் போட்டி

நல்லூர், வியாழன்

நல்லூர் கிராமச் சபைப் பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 12 வட்டாரங்களிலும் 38 பேர் போட்டியிடுகின்றனர். போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர் விபரம் வருமாறு:

**1-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: டி. சண்முகநாதன், என். சண்முகலிங்கம், கே. துரைராசா, இ. கனகலிங்கம், எம். பொன்னுத்துரை.

**2-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: ஆர். சின்னத்தம்பி, பி. நவரத்தினசிங்கம்.

**3-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: எஸ். வல்லிபுரம், கே. இளையதம்பி, என். தில்லைநாயகம்.

**4-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: என் சிவசம்பு, ஆர். சிவலிங்கம், டி. கனகசபாபதி, கே. துரைசிங்கம், வி. சிவராமலிங்கம், கே. பரஞ்சோதிமுதலியார்.

**5-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: கே. கதிரவேலு, கே. சபாபதி, கே. அப்புத்துரை.

**6-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: வி. குமாரகுலசிங்கம், கே. எஸ். செல்லையா.

**7-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: கே. சீவரத்தினம், எஸ். நடராசா, எஸ். சரவணமுத்து.

**8-ம் வட்டாரம்**

திருவாளர்கள்; எஸ். புஷ்பராஜா, பி. என். கந்தையா; இ. வேலாயுதம், கே. இராசா

**9-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: வி. கணபதிப்பிள்ளை, எஸ். கனகரத்தினம், இ. நடராசா.

**10-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: வி: கிருஷ்ணபிள்ளை, எஸ். செல்லத்துரை.

**11-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: என். சின்னத்துரை, வி. கந்தையா.

**12-ம் வட்டாரம்**

திருவாளர்கள்: கே. எஸ். நடராசா, கே. வல்லிபுரம், கே. சிவசுப்பிரமணியம்.

## "அரசாங்கத்தின் பெரிய சாதனை!"

தங்காலை, வியாழன்

எல்லாவற்றுக்கும் "கியூ" முறையை கொண்டு வந்தது தான் இந்த அரசாங்கம் செய்த பெரிய சாதனை. அத்தியாவசிய பொருட்களுக்கு நீண்ட நேரம் கியூவில் நிற்க வேண்டியிருக்கிறது. காணி பெறுவதற்குக்கூட கியூவில் நிற்க வேண்டியிருக்கிறது" என்று திஸமகறம எம். பி. திரு. லக்ஸ்மன் ராஜபக்ஷ வெள்ளவத்தை காலனி அபிவிருத்தி சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

சிறிமா அரசாங்கம், பெரஹராக்களையும், கொண்டாட்டங்களையும், ஏற்பாடு செய்வதில் திறமை வாய்ந்தது. கண்டிய நடனங்களை ஒழுங்கு செய்வதில் பெயர் பெற்றது. ஆனால் நாட்டின் முக்கிய பிரச்னைகளை தீர்க்காமல் இருந்து வருகிறது. இந்த அரசாங்கத்திடம் நல்ல திட்டங்களோ, கொள்கையோ கிடையாது.

பொருளாதார நெருக்கடியும், பணத்தட்டுப்பாடும் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. கிராம மக்களும் இதை நன்கு உணர்ந்து கொண்டார்கள். கௌபீன துணியும், மண்வெட்டியும் கூட, பெற முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இவற்றின் விலைகள் கூட அதிகரித்து விட்டது.

## நீதிபதியின் கார் தீ பிடித்தது !

குருநாகல், வியாழன்

அம்பலாங்கொடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலை சம்பந்தமாக விசாரணை செய்யச் சென்ற உதவி குருநாகல் மாஜிஸ்திரேட் திரு. எச். பெடெபெரேராவின் கார் வழியில் தீப்பிடித்துக்கொண்டது. இச்சம்பவம் நிக்கவெரெட்டியாவிலிருந்து மூன்று மைலுக்கு அப்பால் நடைபெற்றது. காரிலிருந்தவர்கள் வெளியில் இறங்கிய சிறிதுநேரத்தில் தீ அணைக்கப்பட்டது.

## புத்தகத்துக்கு தடையில்லை

கொழும்பு, வியாழன்

டாக்டர் ஏ. ஜே. வில்சன் எழுதிய "தேசபாலன வித்யாவ" (அரசியல் சாஸ்திரம்) என்ற புத்தகம் தடை செய்யப்படமாட்டாது என்று கல்வி மந்திரி திரு. பி. பி. ஜீ. கலுகல்லை தெரிவித்துள்ளார்.

திரு. வில்சனின் புத்தகத்தில் காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காபற்றி தவறான தகவல்கள் வெயாகியிருப்பதால் அப்புத்தகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று அரசாங்க பார்லிமெண்டரிக்குழு கடந்த வாரம் கோரியது.

கல்விமந்திரி திரு. பி. பி. ஜீ. கலுகல்ல இது பற்றி மேலும் தெரிவிக்கையில், வில்சனின புத்தகம் ஆபாசமான தல்லவென்றும், மார்க்கெட்டில் அவை விற்பனை செய்யலாமென்றும் ஆனல் பாடசாலை நூல்நிலையங்களிலிருந்து அப்புத்தகத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று தாம் கல்வி இலாகாவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறினர்.

## கென்னடி படக்காட்சி

தெல்லிப்பழை, புதன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் காலஞ்சென்ற அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் சமாதானப்பணிகள் சம்பந்தமான செய்திப் படக்காட்சி அமெரிக்க தகவல் பகுதியினரால் காண்பிக்கப்பட்டது.

விமன்காமம் இளைஞர் கழக ஆதரவில் யூனியன் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. ஐ. பி. துரைரத்தினத்தின் தலைமையில் இப்படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

## வானொலிநிகழ்ச்சிகள்

வெள்ளி 6-3-64

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — எஸ். சோமாஸ்கந்தன், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு — எஸ. சோமசுந்தரம், 8-00 முஸலிம்நிகழ்ச்சி, 9-15 மதிப்புரை, 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

## தபால்தந்தி சேவை ஸ்தம்பிதம்

காலி, வியாழன்

தபால் இலாகா ஊழியர்கள் மேலதிக நேரம் வேலை செய்ய மறுத்துவருவதால், தென் மாகாணத்திலுள்ள தபால் தந்தி சேவைகள் முற்றாக ஸ்தம்பித்துவிட்டன.

காலி, மாத்தறை போன்ற பிரதான தபாற்கந்தோர்களில் எல்லா வேலைகளும் ஸ்தம்பித்துவிட்டதால், தபால்களும், தந்திகளும் இக்கந்தோர்களில் ஏராளமாகத் தேங்கிக்கிடக்கின்றன.

## கென்யாவுக்கு இலங்கைத் துருப்புகள்

நைரோபி மார்ச் 5

கென்யாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்டு காமன்வெல்த்நாடுகளின் படை ஒன்றை அமைக்கவேண்டுமென்ற பிரேரணை கென்யா பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

## ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் வெள்ளிவிழா ஞாபகசபை

இச்சபை 1935-ம் வருடம் வயோதிபர் விடுதிக்காக நிறுவப்பட்டது. இப்போது அதையே 18 வயதுக்குக் குறைந்த உடற்குறைபாடுள்ளவர்களின் விடுதியாக (Physically disabled) நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று மார்ச் மீ 5-ந் திகதி வியாழக்கிழமை மாலை 6-40 மணிக்கு, இவ்விரு பண்ணையிலுள்ள சபைக் கட்டடத்தில் திறக்கப்படும்.

இதில் சேர விரும்புவர்கள் 5-ந் திகதியன்றும் அதன் பிறகும் இந்த இல்லத்துக்குச் சமுகம் தருக.

தா. சங்கரப்பிள்ளை,
16 கௌரவ காரியதரிசி.


### வரி விளம்பரம்

**தொய்வு, நீரிழிவு**

நுணப்படுத்த உத்தரவாதம் ...திரிமார், அரசியற் பிரமுகர்... எம்மிடம் சிகிச்சை பெற்... விபரங்கள் அடங்கிய கற்றளைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணநந்தக் கையபிள்ளையார் கோ... யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

பேர்மிங்ஹாம் இரும்புப் பெட்டி (Iron Safe) நல்ல நிலையில் உள்ளது. தொடர்பு கொள்க: 110, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 18


## வெளிநாடுசென்று பயிற்சிபெற சலுகை

கொழும்பு வியாழன்

இந்த நாட்டில் ஒரு துறையில் பயிற்சிபெறப் போதிய வசதியில்லாத பட்சத்தில் வெளிநாடுசென்று பயில்வதற்கு வெளிநாட்டுச் செலாவணி அனுமதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

**விசேஷ கமிஷன் காரியாலயம் சங்கானை**

சங்கானை நகரசபையின் விசேஷ ஆணையாளரால் கீழ்க் குறிக்கப்பட்ட வேலைகளுக்கான சீல் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மார்ச் 18, 1964 காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மார்ச் 17, 1964 மாலை 3-00 மணி வரை இந்தக் காரியாலயத்தில் பெறக்கூடிய படிவங்களில் கேள்விப்பத்திரங்கள் நிரப்பப்படல்வேண்டும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 25/-ம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்குமுரிய ரூ 3/-ம் செலுத்தி இப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்காக செலுத்தப்படும் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளர், கேள்வித் தொகைப் பணத்தின் 5 % ஐ பிணையாக அளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். மேலும் விபரங்களை காரியாலய நேரத்தில் காரியதரிசி, விசேஷ கமிஷன் காரியாலயம், சங்கானை என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(1) சேர்ச் ரோட்டுக்கு கல் நிரப்பி தார்பூசுதல், (2) பொதுசன நூல் நிலையத்திற்கு சுவர் அலுமாரி கட்டுதல், (3) காரியாலய றெக்கோட் அறைக்கு சுவர் அலுமாரி கட்டுதல், (4) நூல்நிலையக் கட்டடத்திற்குரிய நிர்வாக வேலைகளைச் செய்தல், (5) காரியாலயக்கட்டடத்திற்குரிய நிர்வாக வேலைகளைச்செய்தல், (6) நடைமுறையிலுள்ள பல் தரிப்பு நிலையத்திற்குரிய திருத்தங்கள் செய்தல்.

எஸ். சி. மாணிக்கவாசகர்,
விசேஷ ஆணையாளர்,
சங்கானை நகரசபை.
107


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி
முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்

# அல்லைப்பிட்டி கிராமத்தில் ஒருவர் போட்டியின்றி தெரிவு

## 12 வட்டாரங்களில் 34 பேர் போட்டி

ஊர்காவற்றுறை, வியாழன்

அல்லைப்பிட்டி கிராமசபையின் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்களை யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி திரு. கே. கணபதி இன்று ஏற்றுக்கொண்டார். மண்கும்பான், அல்லைப்பிட்டி, கிராமங்களின் ஐந்து வட்டாரங்களையும் மண்டைதீவுக் கிராமத்தின் எட்டு வட்டாரங்களையும் கொண்ட இக்கிராமசபைக்கு 34 பேர் போட்டியிடுகிறார்கள். கட்சி ரீதியாக எவரும் போட்டியிடவில்லை. தற்போதைய அங்கத்தவர்களில் மூவர் போட்டியிடாது விலகிக்கொண்டனர். திரு. கனகரத்தினம் குழந்தைவேலு, திரு. வ. சுவக்கீன் பிள்ளை, திரு. ஐயம்பிள்ளை கார்த்திகேசு ஆகியோர் விலகிக்கொண்ட அங்கத்தவர்களாவர். ஐந்து வட்டாரங்களில் நேரடிப்போட்டி நடைபெறுகிறது. தமிழரசு ஆதரவாளரும், தற்போதைய அங்கத்தவருமான திரு. அருணாசலம் முருகேசு 9-ம் வட்டாரத்திற்குப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

போட்டிவிபரம்பின்வருமாறு:

**1-ம் வட்டாரம்**

திருவாளர்கள் தாமோதரம்பிள்ளை - நாகநாதர் (தராசு), இராசரத்தினம் - ஆறுமுகம் (கப்பல்), அருளானந்தம் - செல்வத்துரை (தற்போதைய அங்கத்தவர் (சேவல்), திருநாமம் - பொன்னம்பலம் (சூரியன்).

**2-ம் வட்டாரம்**

திருவாளர்கள் ஞானசுந்தரம் - செல்லட்பா (சூரியன்), கந்தையா - இராமு (தராசு).

**3-ம் வட்டாரம்**

திருவாளர்கள் செபஸதி - இருதயநாதர் (சைக்கிள்), இளையதம்பி - சாமுவேல் (கப்பல்), பாலசிங்கம் - நீக்கிலாப்பிள்ளை (பஸ).

**4-ம் வட்டாரம்**

திருவாளர்கள் கதிரவேலு - கந்தையா (சூரியன்), சபாரத்தினம் - சின்னத்தம்பி (சைக்கிள்), அந்தோனிப்பிள்ளை - அந்திரேசுப்பிள்ளை (கப்பல்).

**5-ம் வட்டாரம்**

திருவாளர்கள் சீவரத்தினம் - குழந்தைவேலு (விளக்கு), நடராசா - வேலுப்பிள்ளை (தற்போதைய அங்கத்தவர், சைக்கிள்), நீக்கிலாப்பிள்ளை - அந்தோனிப்பிள்ளை (முடல்).

**6ம்- வட்டாரம்**

திருவாளர்கள் கைலாசபிள்ளை - கணபதிப்பிள்ளை (தற்போதைய தலைவர்) (புத்தகம்), கனகசுந்தரம் - இராமலிங்கம் (சூரியன்).

**7-ம் வட்டாரம்**

திருவாளர்கள் வேலுப்பிள்ளை - ஏரம்பு (தற்போதைய அங்கத்தவர், தராசு), நாகலிங்கம் - கணநாதபிள்ளை அல்லது கணபதிப்பிள்ளை (வண்ணத்திப்பூச்சி).

**8-ம் வட்டாரம்**

திருவாளர்கள் செல்லத்தம்பி - கதிரவேலு (தராசு), கந்தையா - இலங்கையர் (சைக்கிள்), குலசிங்கநாதன் - கார்த்திகேசு (சூரியன்), இராசரத்தினம் - வேலுப்பிள்ளை (கண்).

**9-ம் வட்டாரம்**

திருவாளர்கள் அருணாசலம் - முருகேசு (போட்டியில்லை - அல்லைப்பிட்டி வட்டாரம்).

**10-ம் வட்டாரம்**

திருவாளர்கள் புலேந்திரன் - கபிரியேல் (சூரியன்), செல்லத்துரை - தவவிநாயகன் (சைக்கிள்), இராசையா - செல்லத்தம்பி (தற்போதைய அங்கத்தவர், (சேவல்), அந்தோனி - வேலன் (கப்பல்.)

**11-ம் வட்டாரம்**

திருவாளர்கள் சபாரத்தினம் - வைத்திலிங்கம் (தற்போதைய அங்கத்தவர் (மணி), மாட்டின் - இராசதுரை (தராசு).

**12-ம் வட்டாரம்**

திருவாளர்கள் கந்தையா - நாகநாதி (தற்போதைய அங்கத்தவர் (சைக்கிள்), கணபதிப்பிள்ளை - சிவசம்பு (தராசு), செல்வராசா - செல்லையா (சூரியன்).

**13-ம் வட்டாரம்**

திருவாளர்கள் திருநாவுக்கரசு - செல்லப்பா (தற்போதை அங்கத்தவர்) (சூரியன்), கணபதிப்பிள்ளை - மூத்ததம்பி (சேவல்).

## துணி கிடைப்பதில் கஷ்டம்

தெல்லிப்பழை, வியாழன்

தெல்லிப்பழையில் கூப்பனுக்குத் துணி விற்பனை செய்யும் புடவைக்கடையில் ஜனக்கூட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. தினசரி சுமார் நாற்பது பேர் மட்டிலுமே துணி பெற்றுக்கொள்கின்றனர். காலையில் 'கியூ'வில் நிற்க ஆரம்பித்தவர்கள்கூட மாலையில் துணி வாங்கமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியுள்ளது. போதியளவு ஊழியர்கள் இல்லாமையே இதற்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

## ஐயங்காருக்கு பிரியாவிடை

நல்லூர், வெள்ளி

பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியராகவும் இராமநாதன் கலைக் கழகத்து அதிபராகவும் சுமார் 42 ஆண்டுகள் கடமையாற்றி தாயகம் திரும்பும் திரு. அ. சே. சுந்தரராஜ ஐயங்காருக்கு கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் பிரிவுபசாரமளித்து பொற்கிளியும் வழங்கிக் கௌரவித்தனர்.

பிரிவுபசாரக் கூட்டத்திற்கு செனட்டர் திரு. சு. நடேசபிள்ளை தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:

அன்பும் அருளும் ஆதரவும் கடமையுணர்ச்சியும் நிரம்பப்பெற்று என்றும் ஆத்மீகவாழ்க்கையே நடாத்தும் திரு. சுந்தரராஜ ஐயங்கார் தொண்டினால் தமிழனினை பெரும்பேறு பெற்றுள்ளார். தமிழ் இலக்கிய நூல்களுக்கு உரை எழுதும் இவரது பேரறிவும் இராமாயணத்திற்கு எழுதிய உரையே சிறந்த சான்றாகும். இத்தகைய பேரறிஞரை நாம் இழக்க நேருவது ஈடுசெய்யமுடியாத நஷ்டமேயாகும்.

கலைக்கழக விரிவுரையாளர் திரு. கு. குருசாமி பேசுகையில் பேராசிரியரான ஐயங்கார் நல்லாசிரியருக்கு வேண்டிய நற்பண்புகள் யாவும் அமையப்பெற்றவர் என்று சொன்னார்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பேராசிரியர் கம்பராமாயணத்தை கற்பிக்கும் முறையே தனிச்சிறப்பு வாய்ந்தது என்றும், திருமதி ஜி. சோமசுந்தரம், பல அறிஞர்களும் சந்தித்துத்தத் தம் கல்வி சம்பந்தமான சந்தேகங்களைப் போக்க உதவியாக இருந்தவர் என்றும் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'சுருக்கமாகவும்தெளிவாகவும் பாடல்களுக்கு உரை செய்வதிலும் நயம் கூறுவதிலும் கல்ல திறமையுடையவர் 'ஐயங்கார்' என்றும் பாராட்டுரை வழங்கினர். செல்விகள் லீலா கந்தையா, இராஜ இராஜேஸ்வரி கந்தையா ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

திரு. சுந்தரராஜஐயங்கார் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தகுந்த கல்லூரியிலே தகுந்த மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தலால் ஓர் ஆசிரியர் தான் பெறத்தக்க பேற்றினை அடைகின்றார் எனவும் தனது இலக்கியத் தொண்டிற்கு மூலகாரணமாகவும் உறுதுணையாகவும் அமைந்தவரான திரு. நடேசபிள்ளையையே இப்பெருமையாவும் சாருமெனக் குறிப்பிட்டார்.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கத்தின் சமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலயத்தில் ஆசிரியர் திரு. ஆ.ச நடராசா "அப்பூதியடிகள்" என்னும் பொருள் பற்றியும், வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ஆசிரியயை செல்வி வசந்தமலர் நாதன் "நவராத்திரியின் மகிமை" என்னும் பொருள் பற்றியும், நல்லூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் ஆசிரியர் திரு. த. சதாசிவம் "சமயத்தின் அரிய நோக்கங்கள்" எனனும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றுவார்கள்.

கச்சேரி நல்லூர் வீதி மூத்த விநாயகர் ஆலயத்தில் ஆசிரியர் திரு. சி. வேலாயுதம் "வேலனின் வெற்றி" என்னும் பொருள் பற்றி உபந்நியாசம் செய்வார்.

## 61 கல்லூரிகள் பங்குபற்றும்

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாண ஆசிரியர் சங்க கல்வி குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பேச்சு, இசை, கட்டுரை போட்டிகளில் 61 கல்லூரிகளைச் சேர்ந்த 1600க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொள்ளுவார்களெனத் தெரியவருகிறது.

கிளைச் சங்கங்களின் போட்டிகள் இம்மாதம் 7-ம் திகதி 5 பாடசாலைகளில் நடைபெறும். யாழ்-மேற்கு ஆசிரியர் சங்க போட்டிகள், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிலும், வலி-மத்தி ஆசிரியர் சங்க போட்டிகள், மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும், வலி-வடக்கு ஆசிரியர் சங்கப் போட்டிகள் காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரியிலும், வலி-கிழக்கு ஆசிரியர் சங்கப் போட்டிகள் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும், யாழ்நகர ஆசிரிய சங்க போட்டிகள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் நடைபெறும்.

## அரசாங்க செலவில் மெக்காவில்மடம்

கொழும்பு, வியாழன்

இலங்கையிலிருந்து செல்லும் மெக்கா யாத்திரிகர்கள் அங்கு தங்குவதற்கு வசதியளிக்குமுகமாக மெக்காவில் ஒன்றரைலட்சம் ரூபா செலவில் ஒரு யாத்திரிகர் மடம் இலங்கை அரசாங்க செலவில் கட்டப்பட்டுள்ளதாக நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன நேற்று பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

இந்த மடம் வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்த உதவும் என்றும் மந்திரி கூறினார்.

## யூகோ, விலிருந்து மீன்பிடி படகுகள்

கொழும்பு, புதன்

யூகோஸ்லேவியாவிலிருந்து இலங்கைக்காகக் கட்டப்பட்டு வரும் 5 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் இங்கு விரைவில் வந்து சேரவிருக்கின்றன.

இம்மாத முடிவில் ஒரு மீன்பிடிப் படகு இலங்கைக்கு வந்து சேரும். மற்றவை ஜூன், ஜூலை மாதங்களில் வந்து சேரும்.

சிங்களப் பரீட்சைக்கு

# 2,500 அரசாங்க ஊழியர் தோற்றவில்லை

## நிரந்தர காரியதரிசிகள் மகாநாடு விரைவில் கூடும்

கொழும்பு, வியாழன்

பல்வேறு அரசாங்கப் பகுதிகளும் திறைசேரிக்குச் சமர்ப்பித்த அறிக்கைகளிலிருந்து சுமார் 2,500 அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றமளிக்கவில்லையெனத் தெரியவருகின்றது.

மேற்கூறப்பட்ட பழைய அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையொன்றுக்குக்கூடத் தோற்றவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியான 62-வது திறைசேரி சுற்றறிக்கையின்படி மேற்கூறப்பட்ட அரசாங்க ஊழியர்கள் திருப்திகரமான விளக்கம் கொடுக்காவிடில் இவ்வருட ஜனவரி மாதம் முதல் கட்டாய ஓய்வுபெற வேண்டும். இதுசம்பந்தமாக அரசாங்க அதிகாரியொருவர் தெரிவிக்கையில், மேற்கூறிய விஷயம்பற்றி அரசாங்கம் விரைவில் பரிசீலனை செய்யுமென்று கூறினர்.

ஏராளமான அரசாங்க ஊழியர்கள் திருப்திகரமான விளக்கம் கொடுத்துள்ளனர், சிங்களம் படிக்கமுடியாதென்று விருப்பம் தெரிவித்த அரசாங்க ஊழியர்கள் தான் கட்டாய ஓய்வுபெறவேண்டியிருக்கும் என்றும் அந்த அரசாங்க அதிகாரி கூறினர்.

இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யும்பொருட்டு நிரந்தரக் காரியதரிசிகளைக் கொண்ட மகாநாடொன்று விரைவில் நடைபெறவிருக்கின்றது. இம்மகாநாட்டை திறைசேரி கூட்டும்.

## "திறைசேரி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பள உயர்ச்சி நிறுத்தப்படும் என்ற திறைசேரியின் 618-ம் இலக்கச்சுற்றுநிருபத்தை அமுல் நடத்துவது பொருத்தமற்றது. எனவே இச்சுற்று நிருபத்தை வாபஸ் பெறும்படி இச்சங்கம் வேண்டுகிறது என்னும் தீர்மம்னம் அகில இலங்கை அரசினர் பாடசாலைத்தமிழர் ஆசிரியர் சங்க வட பிரதேசக்கிளைகளின் பொதுச்சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சிங்கள மகா வித்தியாலய மண்டபத்தில் திரு. ஐ. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், வடமாகாண ஆசிரியர் சங்கம், வட இலங்கைத்தமிழாசிரியர் சங்கம், வடமாகாண அதிபர்கள் சங்கம் என்பனவற்றுடன் கூட்டாகச் சேர்ந்து சிங்கள நிபந்தனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் பற்றி காரியதரிசி திரு. அ. பொன்னம்பலம் விளக்கினர்.

சம வேலைக்குச்சம சம்பளம், மாதாந்தக்கழிவில்லாத பென்ஷன் உரிமை, கல்விச்சேவையில் ஆசிரியர்கட்கு உரிமை, கல்வி ஆணைக்குழு நியமனம், ஆசிரியர்கட்கு அரசியல் உரிமைபோன்ற விஷயங்களில் மற்றைய ஆசிரிய சங்கங்களுடன் கூட்டாகப்போராடுவது பற்றியும் குறிப்பிட்டார்.

பொது நிர்வாகசபை நிறைவேற்றியுள்ள சிங்களநிபந்தனை சம்பந்தமான தீர்மானத்தை இச்சபை ஏற்றுக்கொண்டது.

சமய விசேஷ தினங்களை விடுமுறையாகக்கொள்ளாது பாடசாலைகளில் அவற்றைக் கொண்டாட வேண்டுமென்ற வித்தியாதிபதியின் சுற்று நிருபம் இந்து சமயத்தவர்களைப் பொறுத்தவரையில் செயற்படுத்தமுடியாது என்றும், ஆடி அமாவாசைசிவராத்திரிபோன்றதினங்களில் பிள்ளைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கோவில்களுக்குச்சென்று கொண்டாட வேண்டியன வென்றும் எனவே இச்சுற்று நிருபத்தை வாபஸ் பெறும்படி வித்தியாதிபதியை கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

முதலாம் தரத் தலைமையாசிரியர் பதவியுயர்ச்சி நீண்டகாலமாக எவருக்குமே வழங்கப்படாதிருப்பதனால் தகுதியுடையோருக்குஉடனடியாக முறைப்படி வழங்கவேண்டுமெனவும் சென்றமுறை நடைபெற்ற 2-ம் தரத்தலைமையாசிரியர் பதவி உயர்ச்சியில் தவறவிடப்பட்ட ஐவருக்கும் உடனடியாக கொடுக்கப்படவேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மரண அறிவித்தல்

**திருமதி ஜே ஆர். சபாரத்தினம்**

மலாயா புகையிரத இலாகாவில் கடமையாற்றி காலஞ்சென்ற ஜே ஆர். சபாரத்தினத்தின் அருமை மனைவியும்; யாழ்ப்பாண மாவட்டகாணி அதிபர் திரு. ஆர். வி. தர்மரத்தினம், மலாயா வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சின் காரியதரிசி திரு. ஜெயரத்தினம், திருகோணமலை உணவு இலாகாவைச் சேர்ந்த திரு. வித்துவரத்தினம், திருமதி எஸ். வி. பொன்னையா, செல்வி அசோகவதி ஆகியோரின் அருமைத் தாயாரும்; ஓய்வுபெற்ற மராமத்து இலாகா இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. பொன்னையாவின் மாமியும்; சிலோன் பிறின்டர்ஸ் ஸ்தாபனத்தின் மனேஜர் திரு. சர்வானந்தன், லண்டனிலுள்ள திருமதி காந்தராஜா, திருமதி பொன்னம்பலம் ஆகியோரின் பேத்தியாருமான திருமதி சபாரத்தினம் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று மாலை 5 மணிக்கு சுண்டிக்குளி, சோமசுந்தரம் ஒழுங்கையிலுள்ள அவரது வாசஸ்தலத்திலிருந்து தூண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 20


நிறுத்துங்கள்!




நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனையைப் பாதுகாக்கும் சொல்வ் X உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனைகளைப் ... யுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உறுதியை செய்கின்றது.

இது ஒரு
பாக்கர் பேனை
கம்பனியின் உற்பத்தி

உலகில் ... அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் -1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது